# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக்கல்வித் தேர்வுகள்

### இணையவழி தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி சான்றிதழ், பட்டயம், இளநிலை, முதுநிலை பாடங்களுக்கான திசம்பர் 2021 தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி 01.04.2022 அன்று தொடங்கி நடைபெறவுள்ளன.

1. அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் வெளியிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி தேர்வுகள் இணையவழியாக நடத்தப்பெறும்.
2. செய்முறைத் தேர்வுகள் தொடர்பான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.
3. திசம்பர் 2021 தேர்வுக்கு உரிய நாளுக்குள் கட்டணம் செலுத்தி விண்ணப்பம் அனுப்பியுள்ள மாணவர்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்காமல் தேர்வு எழுதுவோரின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நாளன்று முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் பல்கலைக்கழக இணையதளத்தில் பாடவாரியாக வெளியிடப்படும். தேர்வு நேரம் முற்பகல் 10 மணி முதல் 1 மணி வரை, பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை.
5. முற்பகல் தேர்வு எழுதுவோர் விடைத்தாள்களைப் பிற்பகல் 2.30 மணிக்குள்ளும், பிற்பகல் தேர்வு எழுதுவோர் மாலை 6.30க்குள்ளும் விரைவுத் தபால் / கூரியர் தபால் மூலம் தொலைநிலைக்கல்வித் தேர்வுப் பிரிவுக்கு அனுப்பிவிட வேண்டும்.
6. அனுப்புநர் முகவரியில் தங்களின் பெயர், முகவரி, பதிவெண் மற்றும் பாடப்பிரிவு ஆகியவற்றை எழுதி **கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ), தொலைநிலைக்கல்வித் தேர்வுப் பிரிவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
7. மாற்றுத் திறனாளி (பார்வைக் குறைபாடுடைய) மாணவர்களுக்குத் தேர்வு நேரத்தில் கூடுதலாக 1 மணி நேரம் அனுமதிக்கப்படுகிறது.

8. ஏ4 அளவுள்ள கோடிடப்படாத தரமான வெள்ளைத்தாள்களைப் பயன்படுத்த வேண்டும். இரண்டு பக்கங்களிலும் எழுதலாம். விடைத்தாள்களைப் பக்க எண்களிட்டு பக்க வாரியாக அடுக்கி தரமான நூலினைக் கொண்டு கட்டி ஏ4 அளவுள்ள தரமான உறையில் மடிக்காமல் வைத்து அனுப்ப வேண்டும்.
9. விடைத்தாள்கள் அனுப்பிய ஒப்புகைச் சீட்டினைப் பத்திரமாக வைத்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
10. விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ் பகுதியில் மாணவர்கள் தங்கள் சேர்க்கை எண்ணை எழுதிக் கையொப்பம் இடவேண்டும்.
11. தேர்வு விண்ணப்பத்தில் உள்ள கையொப்பமும், விடைத்தாளில் உள்ள கையொப்பமும் மாறுபடுமானால் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
12. முகப்புப் பக்கத்தில் பதிவெண்ணைத் தவறாக எழுதுவோரின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. எனவே கவனத்துடன், தவறின்றித் தங்களது பதிவெண்ணை எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
13. பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள விடைத்தாளின் முகப்புப் பக்கத்தைப் பதிவிறக்கம் செய்து, தேவைக்கேற்ப நகலெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாள் எழுதும்போதும் முழுமையாகப் பூர்த்தி செய்து ஒவ்வொரு விடைத்தாளின் முகப்புப் பக்கமாக இணைக்க வேண்டும்.
14. ஒவ்வொரு தேர்வினையும் 40 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.
15. விடைத்தாளின் எந்த ஒரு பக்கத்திலும் பெயர் மற்றும் சிறப்புக் குறியீடுகளை எழுதக் கூடாது.
16. தேர்வு தொடர்பான ஐயங்களுக்கு 04362 – 227845 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
17. எத்தகைய முறைகேடுகளிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். முறைகேட்டில் ஈடுபட்டதாகத் தெரியவந்தால் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

28.3.22

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)